IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.18/2022
DEPOSITION OF WITNESS (PW1)

<u>வா.சா. 1சாட்சி கண்ணன் த.பெ.பாலகிருஷ்ணன்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 13.02.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் 10ம்வகுப்பு வரை படித்துள்ளேன். நிரூபணவாக்குமூலத்திற்கு நான்தான் விபரம் சொன்னேன் என்றால் சரிதான். எனது பூர்வீக கிராமம் எது என்றால் வழக்குச் சொத்து அமைந்துள்ள ஆவல்ச்சூரன்பட்டி ஆகும். தாவா வழக்குச் சொத்து கிராம நத்த வகையை சார்ந்தது என்றால் சரிதான். வழக்குச் சொத்து எனது தாத்தாவழியாக எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது ஆகும்.

2. வழக்குச் சொத்திற்கு எனது தாத்தா பெயரில் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பொதுவாக கிராமநத்தத்தில் வீடு கட்டியிருந்தால்தான் பட்டா வழங்குவார்கள் என்றால் சரிதான். நான் எனது அப்பா பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

3. 15.11.2017ல் தானசெட்டில்மெண்ட் பதிவதற்கு முன்பாக வில்லங்ச்சான்று பார்த்தேனா என்றால் இல்லை. கிராமவரைபடம் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. உண்மையில் நான் வில்லஙச்சான்றை தானசெட்டில்மெண்ட் பதிவதற்கு முன்பாக பார்த்தேன் என்றாலும் அதில் பிரதிவாதிகள் பதிவு காணப்பட்டது என்றாலும் அது

தெரிந்தும் எனது செல்வாக்கை பயன்படுத்தி தானசெட்டில்மெண்ட் பதிந்தேன் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.2 ஆவணமானது கிரையத்திற்கு பின்பு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பட்டா வாங்குவதற்கு மனு கொடுத்துதான் பட்டா பெற்றேன் என்றால் சரிதான். இடத்தை அளந்துபார்த்துதான் பட்டா கொடுத்தார்களா என்றால் அளந்துபார்த்துதான் கொடுத்தார்கள். கிராமநத்தத்தில் 10செண்டுக்கு பட்டா தரமாட்டார்கள் என்றாலும் நான் செல்வாக்கை பயன்படுத்தி பட்டா பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.3 ஆவணத்தில் 1ம்பிரதிவாதி பெயர் உள்ளதா என்றால் உள்ளது. அதில் பட்டா எண் 850 என்று உள்ளது என்றால் சரிதான். எனது பட்டா எண் 850 என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி 1998ல் பட்டா பெற்ற நிலையில் நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி அதே பட்டா எண்ணில் எனது பெயருக்கு பட்டா பெயர்மாற்றம் செய்தேன் என்றால் சரியல்ல.

6. அழகம்மாள் பெயரில் உள்ள பட்டாவை வருவாய்துறையினர் விசாரணை செய்து இரத்து செய்தனரா என்றால் தெரியாது. பட்டா ஊர்ஜிதத்தில் இருக்கும்போது அதே பட்டா எண்ணில் எனக்கு பட்டா சட்டப்படி வழுங்கமுடியாது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து அதனை வழங்கிய அதிகாரியை விசாரணை செய்தால்தான் தெரியும் என்றாலும், அவர்களை விசாரணை செய்ய நான் தயாராக உள்ளேன் என்றாலும் சரிதான்.

7. நான் வெளியூரில் தொழில் செய்து வருகிறேனா என்றால் சென்னையில் ேஹாட்டல் வைத்துள்ளேன். 15 வருடங்களாக அங்குதான்

உள்ளேன். பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் மேற்படி விபரத்தை கூறியுள்ளேனா என்றால் இல்லை. 2019முதல் 2024 வரைக்கும் ஆவல்ச்சூரன்பட்டி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன் என்றால் சரிதான்.

8. நான் ஊராட்சிமன்ற தலைவர் என்பதல் வெளியூரில் தங்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது உறவினர் என்றால் சரிதான். எனது அப்பாவின் அனுமதியின் பேரில்தான் பிரதிவாதிகள் கடை நடத்திவந்தார்கள் என்பதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2019ல் வழக்குச் சொத்தில் நிரந்தர மேற்கோப்புகளை கட்டினார் என்று குறிப்பிடப்பட்டதற்கு என்ன அர்த்தம் என்றால் கட்டிடம் கட்டினார். மேற்படி கட்டிடம் கட்டும்போது நான் புகார் கொடுத்தேனா என்றால் நான் அப்போது ஊரில் இல்லை. அச்சமயம் ஊரில்தான் இருந்தேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2021ல் கட்டிடம் கட்டும்போது நான் ஊரில் இருந்தேனா என்றால் இல்லை. எனது பிராதில் 2021டிசம்பரில் ஊருக்கு வந்திருந்த போது கட்டிடம் கட்டியது தெரிய வந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தால் அது சரியா என்றால் தெரியாது.

9. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களானது வழக்குச் சொத்திற்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் வா.சா.ஆ.1ற்காக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் பிராது தாக்கல் செய்யும்போது நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.6 ஆவணத்தின் உண்மைதன்மையை

அதனை வழங்கிய அதிகாரியை விசாரணை செய்தால்தான் தெரியவரும் என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.8 வா.சா.ஆ.9 ஆவணங்களை நான் வழக்கிற்காக உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் பிரதிவாதி 1984முதல் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் ஊராட்சி தேர்தலில் எனக்கு எதிராக பிரதிவாதிகள் செயல்பட்டதால் நான் இந்த வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை பொறுத்து அனுபவமோ, உரிமையோ எனக்கோ எனது தந்தைக்கு எக்காலத்திலும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.